வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந,க.எண். 3865 /ஆ4 /2024 நாள்: 25.03.2024

பொருள் பள்ளிக்கல்வி – வேலூர் மாவட்டம் – போட்டித் தேர்வுகள் – 2023 – 2024 ஆம் கல்வி ஆண்டில் NEET போட்டித் தேர்விற்கு பயிற்சி வகுப்புகள் ( மார்ச் 2024 / ஏப்ரல் 2024 –ல் நடைபெறுதல் – சார்ந்து

பார்வை சென்னை,6. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.69931/கே/இ3/2023 நாள்.28.02.2024

-----

பார்வையில் காணும் செயல்முறைகளின் அறிவுரைகளின்படி வேலூர் மாவட்டத்தில் NEET (UG) 2024 தேர்விற்கு விண்ணப்பித்துள்ள 12 – ஆம் வகுப்பு மாணவர்களுக்கு கீழ்கண்ட பயிற்சி மையங்களில் வருகிற 25.03.2024 முதல் 02.05.2024 வரை ஆண்டில் NEET தேர்வு சார்ந்த பயிற்சிகள் / தேர்வுகள் நடத்தப்படவுள்ளது. இணைப்பிலுள்ள கால அட்டவணையின்படி இயற்பியல்,வேதியல்,தாவரவியல் மற்றும் விலங்கியல் பாடங்களில் பயிற்சிகள் நடத்தப்பட உள்ளது. எனவே அரசு / அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் தங்கள் பள்ளியில் பயிலும் 12 ஆம் வகுப்பு பயின்ற மற்றும் NEET தேர்விற்கு விண்ணப்பித்த மாணவர்களை தங்களுக்கு அருகாமையில் உள்ள பயிற்சி மையத்தில் நடைபெறும் பயிற்சியில் கலந்து கொள்ள அறிவுறுத்தக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பயிற்சி ஒருங்கிணைப்பாளர்கள்

1. ந.கிருஷ்ணசாமி முதலியார் நிதியுதவி மேனிலைப்பள்ளி/கலந்து கொள்ள வேண்டிய ஒன்றியங்கள் (அணைக்கட்டு, கணியம்பாடி, வேலூர் புறநகர் & வேலூர் நகரம்) ஒருங்கிணைப்பாளர் திரு. ராஜேஷ்கண்ணா, தலைமை ஆசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி,தொரப்பாடி.

   திரு.K.பாஸ்கர், தலைமை ஆசிரியர், ந.கிருஷ்ணசாமி முதலியார் நிதியுதவி மேனிலைப்பள்ளி, வேலூர்
2. திருவள்ளுவர் நிதியுதவி மேனிலைப்பள்ளி, குடியாத்தம் /கலந்து கொள்ள வேண்டிய ஒன்றியங்கள் குடியாத்தம், கே.வி.குப்பம், குடியாத்தம்& பேர்ணாம்பட்டு/ திரு.நேத்தாஜி, தலைமை ஆசிரியர், திருவள்ளுவர் நிதியுதவி மேனிலைப்பள்ளி, குடியாத்தம்.
3. அரசு ஆண்கள் மேனிலைப்பள்ளி, காட்பாடி/கலந்து கொள்ள வேண்டிய ஒன்றியம் காட்பாடி/ திரு. K.ஜோதீஸ்வரப்பிள்ளை, தலைமை ஆசிரியர், அரசு ஆண்கள் மேனிலைப்பள்ளி, காட்பாடி.

பயிற்சி மைய ஒருங்கிணைப்பாளர்கள் தங்கள் மையத்திற்கு ஒதுக்கப்பட்ட பாடக் கருத்தாளர்களைக் கொண்டு கால அட்டவணைப்படி பயிற்சி நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும். தேர்வுகள் கால அட்டவணைப்படி நடைபெறுவதையும், மதிப்பீடு செய்யப்பட்டு மதிப்பெண் பட்டியல் பராமரிக்கப்படுவதையும் உறுதி செய்ய வேண்டும். அனைத்து பயிற்சியில் கலந்து

கொள்ளும் மாணவர்கள் மற்றும் பாடக் கருத்தாளர்கள் வருகைப் பதிவேட்டினை முறையாக பராமரிக்கப்படுவதையும் உறுதி செய்ய வேண்டும்.

பயிற்சி மைய ஒருங்கிணைப்பாளர்கள் தங்கள் மையத்தில் இணையதள வசதியுடன் வகுப்பில் பயிற்சி நடத்திட திட்டமிடல் வேண்டும். இணைப்பிலுள்ள SMART CLASS ROOM பயிற்சி கால அட்டவணைப்படி பயிற்சி மையங்கள் திங்கள் முதல் சனி வரை காலை 09.15 மணி முதல் மாலை 04.30 மணி வரை செயல்படும்.

ஒவ்வொரு நாளும் அன்றும் காலை 09.15 மணி முதல் 10.45 மணி வரை திருப்புதலும் அதைத் தொடர்ந்து 11.00 மணி முதல் 12.40 மணி வரை வாராந்திர தேர்வுகளும் நடைபெறும் மதிய உணவு இடைவேளைக்கு பின் பிற்பகலில் கலந்துரையாடல் மற்றும் Motivation அமர்வுகள் சிறந்த வல்லுநர்களைக் கொண்டு நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. பயிற்சியின் இறுதியில் மொத்தம் 3 திருப்புதல் தேர்வுகள் நடைபெறும் என தெரிவிக்கப்படுகிறது.

பள்ளிப் பார்வையின்போது NEET பயிற்சி பெற்ற மாணவர்கள் உயர் கல்விக்கு தகுதி பெற்றதை கண்டு இயக்குநர் அவர்கள் பாராட்டியது குறிப்பிடத்தக்கதாகும்.

இணைப்பு:

1. கால அட்டவணை
2. கருத்தாளர்கள் ,மையங்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள் விவரம்

//ஓம். செ.மணிமொழி //
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர் – 9.

பெறுநர்
1.அனைத்து அரசு / அரசு உதவி பெறும் மேல்நலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள்
அரசு மகளிர் / ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, தலைமை ஆசிரியர்கள் மற்றும்
மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர், மைய பயிற்சி ஏற்பாட்டிற்காக

நகல்.மாவட்டக் கல்வி அலுவலர்கள்